வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2023

வழக்கு சாட்சி – PW 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பழனிச்சாமி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நாச்சிமுத்து | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பொல்லிகாளிபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 இருவரையும் தெரியும். அவர்களது தோட்டம் எனது தோட்டத்திற்கு பக்கத்தில் உள்ளது. எதிரிகளை தெரியும். அவர்களது தோட்டமும் எனது தோட்டத்திற்கு கிழபுறத்தில் உள்ளது. இருவர்களுக்கும் அடிக்கடி பொழி சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. அதை பேசி அளவையாளரை வைத்து அளந்து கம்பி வேலி போட்டுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து அ.சா.1 கம்பி வேலி போட்டார். கம்பி வேலி போடும் போது எதிரிகள் கூடவே இருந்தார்கள். எதிரிகள் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. 24.10.2019 ஆம் தேதி அதிகாலை 4.00 லிருந்து 4.30 மணிக்குள் நான் வழக்கம்போல் மாடு பிடித்து வந்து கட்டுவேன். அன்று சத்தமாக இருந்தது. என்னவென்று சென்று பார்த்தபோது எதிரிகள் கடப்பாறை, சம்பட்டி, அரிவாள் ஆகியவற்றை கையில் வைத்துக்கொண்டு கம்பிவேலியை சேதப்படுத்தி, அ.சா.1 ஐ பார்த்து கண்டபடி பேசிக்கொண்டிருந்தார்கள். நான் கேட்டதற்கு என்னையும் சத்தம் போட்டார்கள். இது சம்மந்தமாக அ.சா.1 போலீசில் புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:49:00 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2023

வழக்கு சாட்சி – PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நாச்சிமுத்து | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | அங்கப்பன் | தொழில் | : | – |
| கிராமம் | : | எம்.புதுபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 77 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு வருகிறேன். எனக்கு பிரேம்குமார், கோகுல கண்ணன் என்ற இரண்டு மகன்கள் உள்ளார்கள். அ.சா.1 பிரேம்குமார் எனது மூத்த மகன் ஆவார். கீழ்வட்டார காட்டுப்பகுதியில் எங்களுக்கு சொந்தமான விவசாய பூமி உள்ளது. எங்கள் பூமிக்கு கிழபுறத்தில் எதிரிகளுக்கு சொந்தமான விவசாய பூமி உள்ளது. பொழி சம்மந்தமாக அடிக்கடி எங்களிடம் பிரச்சனை செய்து வந்தார்கள். ஊர்காரரர்கள் சமாதானம் செய்து வைத்தார்கள். எனது மகன் படி கட்டி அளவையரை வைத்து அளந்து கல் வேலி அமைத்தார். அப்போது எதிரிகளும் அங்கு இருந்தார்கள். அவர்கள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை.

2. நாங்கள் வேலி போடும்போதும் எதிரிகள் இருந்தார்கள். அவர்கள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. கடந்த 24.10.2019 ஆம் தேதி சுமார் விடிற்காலை 4.00 மணியளவில் நாள் குளைத்தது. என் மகனை சென்று பார்க்க சொன்னேன். நானும் பின்னால் சென்றேன். வேலியை சேதப்படுத்தும் சத்தம் கேட்டது. அப்போது எதிரிகள் மூவரும் அங்கு இருந்தார்கள். எதிரி லிங்கேஸ்வரன் கையில் கடப்பாறையும், அவரது அப்பா எதிரி ராமசாமி சம்பட்டியும், எதிரி தனலட்சுமி அரிவாளை

கையில் வைத்து கம்பிவேலியை சேதப்படுத்திக்கொண்டு இருந்தார்கள். அதை நான் பார்த்தேன். என் பையன் சென்று கேட்டதற்கு கண்டபடி கெட்டவார்த்தையால் திட்டி கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். அக்கம் பக்கத்தில் உள்ள நபர்கள் வந்தார்கள். பக்கத்து தோட்டத்துக்காரர் பழனிச்சாமி வந்தார். இது சம்மந்தமாக எனது மகன் போலீசில் புகார் கொடுத்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் அரிவாள், சம்பட்டி, கடப்பாறை ஆகியவற்றை வைத்து தான் வேலியை சேதப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:49:07 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 64 of 2023

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பிரேம்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நாச்சிமுத்து | தொழில் | : | விவாசயம் |
| கிராமம் | : | எம்.புதுபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.09.2024.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை:** **நாள்: 03.09.2024**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு விவாசயம் செய்து வருகிறேன். எனக்கு முத்தனம்பாளையமம கிராமத்தில் விவசாய பூமி உள்ளது. அதை ஒட்டி கிழபுறத்தில் எதிரிகள் ராமசாமி, லிங்கேஸ்வரன், தனலட்சுமி ஆகியோரது விவசாய பூமி உள்ளது. இருவருக்கும் அடிக்கடி வரப்பு சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு வந்தது. பக்கத்து தோட்டத்துக்காரர்கள் பிரச்சனையை தீர்த்து வைத்தார்கள். நான் பூமியை அளந்து கம்பி வேலை போட்டுக்கொள்ளலாம் என்று முடிவு செய்து அளவையாளரை வைத்து அளந்து கல் வேலி போட்டுக்கொண்டேன். அப்போது அளக்கும்போதும், கல் வேலி போடும்போதும் எதிரிகள் இருந்தார்கள். பக்கத்து தோட்டத்தக்காரர்களும் அளக்கும்போதும், கல் வேலி போடும்போதும் இருந்தார்கள்.

2. கடந்த 24.10.2019 ஆம் தேதி அதிகாலை 4.00 மணிக்கு மேல் நாய் குளைத்து கொண்டிருந்தது. நான் எழுந்து சென்று போய்பார்தபோது எதிரிகள் மூவரும் கையில் ஆயுதங்களுடன், எதிரி லிங்கேஸ்வரன் கையில் கடப்பாறையும், அவரது அப்பா எதிரி ராமசாமி சம்பட்டியும், எதிரி தனலட்சுமி அரிவாளை கையில் வைத்து கம்பிவேலியை சேதப்படுத்திக்கொண்டு இருந்தார்கள். நான் உங்களை வைத்து தான் அளந்து கம்பி வேலி போட்டேன், எதற்கு சேதப்படுத்திருகிறிர்கள் என்று கேட்டதற்கு, தாயோழி

உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மூவரும் என்னை நோக்கி நெருங்கி வந்தார்கள். அப்போது எனது அப்பாவும், பக்கத்து தோட்டத்துக்காரர் பழனிச்சாமியும் வந்தார்கள். அதை பார்த்து எதிரிகள் மூவரும் என்னை துரத்தி வருவதை நிறுத்திவிட்டடார்கள். இதை காவல் துறையிலோ, மற்ற நபர்களிடம் சொன்னால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கையில் வைத்திருந்த ஆயுதத்தை காண்பித்துவிட்டு மிரட்டி, அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். சேதப்படுத்திய கம்பி வேலி மற்றும் கல் ஆகியவற்றின் மதிப்பு ரூ.9000/– ஆகும்.

3. இது சம்மந்தமாக அன்றே காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். அன்றே புகாரை பெற்றுக்கொண்டு CSR பதிவு செய்து 26.10.2019 ஆம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு எதிரிகள் போட்டுவிட்டு சென்ற கடப்பாறை, சம்பட்டி, அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றிச்சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். **இரும்பு கடப்பாறை அ.சா.பொ.1 ஆகும். சம்பட்டி அ.சா.பொ.2 ஆகும். அரிவாள் அ.சா.பொ.3** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் அங்கு வந்து விசாரணை செய்து சேதப்படுத்திய பொருட்களை போட்டோ எடுத்தார்கள். ஆஜர் 1, 2 எதிரிகள் தான் சம்பவத்தன்று பொருட்களை சேதப்படுத்தி கொலை மிரட்டல் செய்த நபர்கள் ஆவார். (3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). இது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>

1, 2 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 3 ஆம் எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.09.03 20:49:12 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.